உ
ஓம் சக்தி துணை

# துர்க்கா மஞ்சரி


"முக்கண்ணியை தொழுவார்க்கு ஒருதீங்கில்லை"
அபிராமி பட்டர்

சுபானு வருடம் ஆடி 1ம் திகதி வள்ளுவர் ஆண்டு 2034 (17-07-2003)

வெளியீட்டாளர்

அருள்மிகு
துர்க்காதேவி


இந்து
தேவஸ்தானம்



மலர்: 4

இதழ்: 1

7468 EDMONDS STREET, BURNABY, B.C. V3N 1B2. TEL: (604) 521-3472


திருவாக்கும் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமு கத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

# ஆலயமும் நாமும்

**அ**ம்பிகை தேரில் வெளி வீதிவலம் வரும் திருநாளான இன்றைய தேர்த்திருவிழா தினத்தில் உங்கள் கரங்களில் துர்க்கா மஞ்சரியை தவழவிடுவதில் பெருமையடைகிறோம். ஆலயத்தின் வருடாந்த உற்சவம் வழமை போல் இம்முறையும் கோலாகலமாக நடைபெற்றுவருகிறது அன்பர்கள் பலர் திருவிழாக்களை பொறுப்பேற்று உபயம் செய்து வருகின்றனர். திருவிழாவிற்கு முன்பதாக ஆலயம் வைபவத்திற்கு ஏற்றதாக புனரமைக்கபட்டுள்ளது. அதில் குறிப்பிடக்கூடிய விடயம் சிவன்,ஐயப்பன், பைரவர் ஆகிய தெய்வங்களின் திருப்பீடம் அடியவர் ஒருவர் தானாகவே முன்வந்து அமைத்துக் கொடுத்திருக்கிறார். இவ்வருட திருவிழா உற்ச்சவத்தில் கூடுதலான அடியவர்கள் கலந்து கொண்டுவருவது அம்பிகையின் அருட்கடாச்சம் பக்த்தர்களுக்கு கிடைப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த மஞ்சரியும் வழமைபோல் பல அன்பர்களின் ஆக்கங்களை தாங்கிவருவதோடு எமது செயற்பாடுகளையும், ஆலயத்தின் வருங்கால செயற்த்திட்ங்களையும் தங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகிறோம்

இன்றைய நவநாகரீக உலகத்தில் எமது இலட்சியங்கள் கொள்கைகள் என்று சொல்லிக் கொண்டு தலைக்கு மேல் தீர்க்க முடியாத சுமைகளை சுமந்துகொண்டு அனுதினமும் அல்லலறும் இந்த மானிட வாழ்க்கையில், நாம் இறப்பதற்காவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையும் மறந்து நாம் செய்யும் செயல்கள்தான் எத்தனை எத்தனை. வெளிநாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் நாளாந்தம் வேலை, வேலைக்கு போய்வந்ததும் வீட்டு வேலைகள் என்று மன உலைச்சலினால் ஓய்வுபெற மனம் துடிக்கிறது. இந்த இடர்ப்பாடுகளை தீர்ப்பதற்குதான் அன்னையி ஆலயம் அபயமளிக்கும் கல்ங்கரை விக்காகத் திகழ்கிறது. மனிதனுடை தேவையற்ற உணர்ச்சிகளை கட்டுபடுத்தி சாந்தியையும், அமைதியையும் தரும் ஓர் இடம்தான் அன்னையின் ஆலயம். தெய்வத்தின் பெயரால் ஒன்றுகூடும் இடம் ஆலயம். இங்கு எல்லாம் பக்தி மயம். ஆலயத்திற்கு வந்து தெய்வ தரிசனம் பெறுவதுதோடு எமது கடைமைகள், பொறுப்புக்கள் முடிந்து விடுவதில்லை ஆலயத்தை நல்ல நிலையில் பராமரிக்க வேண்டும் அதற்கு ஆலயத்தின் தேவைகள் என்ன என்பதை நாம் கேட்டறிய வேண்டும். ஆலய்த்திற்கு வந்து பணிகள் செய்பவன் தொண்டன் ஆதிலும் தாமாகவே முன் வந்து செய்பவனே உண்மையான தொண்டன். நிர்வாகதில் இருப்பவர்கள் செய்வார்கள் என்று சொல்லி இருந்துவிடாமல் தாமாகவே முன் வந்து தொண்டு செய்யும் நிலை எமது ஆலயத்தில் வரவேண்டும் அப்போதுதான் எமது ஆலயத்தை நன்றாக பராமரிக்கலாம்.

அம்பிக்கு ஆலயம் அமைந்த முறையாவும் நீங்கள் அறிவீர்கள். ஆலயம் ஒன்றை அமைத்ததோடு எமது கடைமை முடிந்து விடவில்லை இந்த ஆலயத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பது தான் மிகவும் முக்கியமான விடயம். தெய்த்தின் பெயரால் ஒன்று கூடும் நாம் எமது மூதாதையரின் வழியை பின்பற்றி சமய அனுட்டானங்களையும், சடங்குகளையும், விழாக்களையும் முன்னெடுத்து வருகிறோம். அத்தோடு சமயபாட, யோக வகுப்புக்களும் ஞாயிறுதோறும் எமது ஆலயத்தில் நடைபெற்று வருகிறது.

ஆயத்திற்கு ஏற்ற காணி கட்டிடம் வாங்கும் போது நாம் பல அன்பர்களிடம் இருந்து வட்டியில்லாக் கடனாக நிதி திரட்டினோம், அதுயாவும் இப்போது கொடுத்து முடித்துவிட்டோம். ஆலயத்தின் காணித் துண்டுகளை பிரித்து துண்டொன்று இருநூற்று ஐம்பது டொலர்களாக விற்றுக் கொண்டிருக்கிறோம். ஆரம்பத்தி நாம் அடியவர்களிடம் பெற்ற பணத்திற்கு நாம் முன்பு கூறியது போல் ஆலயத்தின் மண்டபத்தில் அவர்களுடைய பெயர்களை பதித்துள்ளோம். பங்குகளை வாங்கிய அடியவாகள் தங்கள் பெயர்கள் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அத்தோடு ஆலயத்திறக்கு அங்கத்தவராக சேர்ந்து கொள்ள விரும்பும் அடியவர் தாமாக முன்வந்து சேர்ந்து கொள்ளலாம்.

## ஆலய பூசை நேரங்கள்

தினம் தோறும் மதியநேரப்பூசை பகல் 12.00 மணிக்கு நடைபெறும்.

தினம் தோறும் இரவு நேரப்பூசை இரவு 7.30 மணிக்கு நடைபெறும்.

இராகு காலப்பூசை பிரதி செவ்வாய் தோறும் பகல் 2.00 மணிக்குநடைபெறும்.

## அருள்மிகு துர்க்காதேவி இந்து தேவஸ்தானம்

### பூசைக்கான கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| 1. | சாதாரண அருட்சனை/Ordinary Archanai | $ 5.00 |
| 2. | மோட்ச அருட்சனை /Special Archanai | $ 11.00 |
| 3. | சகஸ்ரநாம அருட்சனை /1008 NAMES & Deity Archanai | $ 21.00 |
| 4. | வாகன பூசை, / Vehicle Poojah | $ 21.00 |
| 5. | படம் வைக்கும் பூசை/ Picture Praying Poojah | $ 21.00 |
| 6. | சோறூட்டுதல்/Initiating Baby shower | $ 51.00 |
| 7. | சாதாரணபூசை/ Ordinary Poojah | $ 51.00 |
| 8. | அபிசேகம் பூசை உட்பட/ ABBISEKAM | $ 101.00 |
| 9. | ஸ்நாபன அபிசேகம்/ SNABANA ABBISEKAM | $ 251.00 |
| 10. | சங்காபிசேகம்/ SANGABISEKAM | $ 401.00 |

மேல் குறிப்பிட்டவற்றிக்கு பிரசாதம் தனி

அந்தியட்டி, கல்யாணம், வீடு குடிபுகுதல், அன்னதானம், போன்ற விபரங்களுக்கு நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## அறிவுக்கு விருந்து

நம்பிக்கையும் வழிபாடும் இல்லாது செய்கிற வேலைகள் வாசமில்லாத செயற்கைப் பூவைப்போல. பிரார்த்தனையில் உள்ளமில்லாத சொற்களை உபயோகிப்பதைவிட சொற்கள் இல்லாத உள்ளத்தைப் பயன்படுத்துவது மேல்(மகாத்மாகாந்தி)

மழைநீர் மேட்டுநிலத்தில் தங்கிநிற்பதில்லை.பள்ளமான இடத்திற்கு ஓடிவந்துவிடுகிறது.அதுபோல் கடவுள் கிருபையானது தற்பெருமையும் கர்வமும் உள்ளவர்களுடைய உள்ளத்தில் தங்கிநிற்பதில்லை(இராமகிருஸ்ணர்)

முடிவில்லாத பிறப்பாகிய மாயையை கடக்கும் பொருட்டு ஜீவனுடைய சோகங்களையும் துன்பங்களையும் கருணையினால் அழித்துவிடுபவரே உண்மையான குரு(விவேகானந்தர்)

சாதாரணமான ஒருவரைப் போற்றுவதோ பாராட்டுவதோ மரியாதை செய்வதோ சரியாகாது.முதலில் இருந்து இலட்சியத்தின் இறுதிவரை அவர் காட்டிய அறவழியில் நடப்பதும் சரியான வழியில் அறம் செய்வதும் மட்டுமே. அவரைப் போற்றுவதும் பாராட்டுவதும் மரியாதை செய்வதும் ஆகும்.(புத்தர்)

ஒவ்வொரு முயற்சிக்கும் ஏதோ ஒரு சமமான எதிர்ப்பதமான விமர்சனம் நிச்சயம் இருக்கும். வெற்றிகள். பெரும்பாலும் தனிமையில் கிடைக்கும் தோல்விகள் நூறு பேருக்கு மத்தியில். நீங்கள் சொல்வதைப் யாரும் காது கொடுத்துக் கேட்கமாட்டார்கள். நீங்கள் தவறு செய்யும்வரை(மேல்நாட்டு அறிஞர்)

இறைவனைக்கான வழி------

உடம்பில் உத்தமன் கோயில் கொண்டுள்ளான் என்று திருமூலர் கூறுகிறார். அதை அனுபவித்து உணரவும் நமக்குள்ளே இருக்கின்ற ஆற்றலை அடையாளம் காணவும் யோகா பேருதவி செய்கிறது.

தொகுப்பு.இணுவைக்குமரன்)

## ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தரின் 'தினசரி தியானம்' நூலில் இருந்து சிந்தனைக்கு சில முத்துக்கள்

### அன்பு

அன்புக்களஞ்சியமே! என்னை நீ அன்பில் தோய்த்து அன்புமயம் ஆக்கிவிடாயோ? அன்பில்லாது நான் எங்ஙனம் உயிர் வாழ்வேன்? உன்னிடத்தில் அல்லாது அன்பை நாடி நான் வேறு எங்கு செல்வேன்?

வாழ்வை இனியதாக்குவது அன்பு. துன்பங்களிலிருந்துமீளச்செய்வது அன்பு. குடும்ப வாழ்கையைமேன்மைப்படுத்துவது அன்பு. உலக வாழ்க்கையை சுவைக்கச் செய்வது அன்பு. அழகற்றதற்கு அழகூட்டுவது அன்பு. அன்பு பொலியுமிடம் சுவர்க்கம். அன்பு மறைந்தவிடம் நரகம். மனமே நீ அன்பில் ஊறி வளர்க!

**அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.**

- திருமந்திரம்

### தொண்டு

ஆருயிர்க்கெல்லாம் அன்புடன் தொண்டு செய்யும் ஆர்வத்தை அண்ணலே! எனக்கு நல்குவாயாக. சேவை செய்பவன் மனதைவிட்டு வேற்றுமை விலகிவிடுகிறது. மன்னுயிரைத்தன்னுயிர்போல அவன் கருதுகிறான். வேற்றானாய் இருந்தவன் சேவையின் மூலம் தனக்கு உற்றவனாகி விடுகிறான். அங்ஙனம் ஒற்றுமை நிலைநாட்டப்படுகிறது. ஐக்கிய உணர்ச்சி வளர்கிறது. அதினின்று நல்லறிவு ஓங்குகிறது. தொண்டு என்னும பெருவாய்ப்பு எல்லார்க்கும் சொந்தமானது. அதைப் பயன்படுத்தாதவன் வாழ்ந்தும் வாழாதவனாகிறான். மனமே! சேவையே உன்னை மேலோன் ஆக்குகிறது.

**உண்டு உடுத்துப் பூண்டு இங்கு உலகத்தார் போல்திரியும்**
**தொண்டர் விளையாட்டே சுகங்காண் பராபரமே.**

- தாயுமானவர்

### தேன் ஈ

தெவிட்டாத ஆனந்தத்தைத் தரும் தேவா! நான் தேனீ போன்று தூயதையே நாடுபவன் ஆவேனாக. தூய நிலை கிட்டவில்லை என்று துச்சத்தின்பால் நான் திரும்பலாகாது. சாணத்தில் உதிக்கும் புழுவை எடுத்துச் சந்தனத்தில் வைத்தால் அது செத்துப்போகும். அங்ஙனம் கயவர்களுக்கு நல்லாரிணக்கம் பெருவேதனையாகும். வீட்டு ஈ சில வேளை மலத்திலும், சில வேளை நல்ல தின்பண்டத்தின் மீதும் உட்காரும். இடைத்தரமான மக்கள் நல்லதையும் கெட்டதையும் மாறி மாறிச் செய்கின்றனர். நெஞ்சே நீ தேன் ஈ போன்று நல்லதையே நாடு. நம் இறைவனுக்கு நீ சொந்தமாவாயாகுக!

**எத்திக்கும் தானாகி என்னிதயத்தே ஊறித்**
**தித்திக்கும் ஆனந்தத்தேனே பராபரமே!**

- தாயுமானவர்

## தாய்மண்ணே வணக்கம்

தொடர்ச்சி----------

சிந்துநதிக்கு கிழக்கேயுள்ள சமவெளியில் வாழ்ந்த மக்கள் இந்துக்களாகவே இருந்தனர். மனித குலத்திற்கு மூதாதையரான சப்தரிசிகள் ஞானிகள் முனிவர்கள் இங்குள்ள சரஸ்வதி நதிக்கரையில் வாழ்ந்தனர். வேதங்கள் ஆகமங்கள் உபநிடதங்கள் இங்கேயே தோன்றின.

குமரி நாட்டிலிருந்து மக்கள் இந்தியா முழுவதிலும் வேறுபிற நாடுகளிலும் பரவினர் என்பது தமிழராகிய எமது கதையாகும்.இந்திய மக்கள் யாவரும் அடிப்படையில் ஓரினத்தவர் என்பதும் மொழிகளில் ஆரியர் திராவிடர் என்ற சொற்களின் அடிப்படைக் கருத்திற் பயன்படுத்தினர்.

பண்டைய இந்திய மக்களை ஏழு அடிப்படை இனமாகப்பிரித்து பார்க்கிறார்கள். அவையாவன :-துருக்கி இரானியர், இந்தியஆரியர், ஆரியத்திராவிடர், மங்கோலியத் திராவிடர், திராவிடர். இன்றுமக்கள் மொழி அடிப்படையில் இனங்களாகப் பிரிக்கப்படுகின்றனர்.காலத்துக்குக் காலம் வெளிநாடுகளிலிருந்து (மொங்கோலியா வெளி அரேபியர்) இந்தியாவுக்குட் புகுந்து அங்கு வாழ்ந்த மக்களுடன் கலந்து வாழத்தொடங்கினர்.

மாவீரன் அலெக்ஸாண்டர் படைகள் இந்தியாவின் இந்துநதிவரை வென்றன. அவர் இறந்தபின் அவருடைய படைவீரர் வென்ற நாடுகளை ஆண்டனர்.கிரேக்கர் யவனர் அரேபியர் துருக்கியர் இரானியர் முதலிய நாட்டு வீரர்கள் இப்படையில் இருந்தனர். கி.மு.2000 அளவில் வந்து புகுந்தவர்களையும் இன அடிப்படையில் ஆரியரென்றே கருதப்பட்டது.

கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்பத்தில் மேற்கே உரோமியப் பேரரசும் கிழக்கே சீனப்பேரரசும் இருந்தன. இமயமலை தொடக்கம் தமிழ்நாடு வரையும் (கங்கைச்சமவெளி உட்பட) ஆண்டவர் ஆந்திரப் பெருங்குடியில் பிறந்த மகா கர்ணராவர்.

தெற்கே சேர சோழ பாண்டிய அரசுகள் இருந்தன. சங்க காலத்திற்குப் பின்பு தமிழ்நாட்டிற்குள் வந்த ஆரியர் எனப்பட்டோர் பெரும்பாலும் கலிங்கர் கன்னடர் சாளுக்கியர் இராட்டிரகூடர் கங்கர் எனப்பட்டோர் வடமொழியையும் பிராமணியத்தையும் தமிழ்நாட்டிற் பரப்பினர். இவர்கள் தங்களை ஆரியர் என்று கூறினாலும் இன அடிப்படையில் திராவிடரே.

(தொடரும் அன்புடன் க.கு)

## தொடுத்தலும் எடுத்தலும்

இன்று இப்பிறப்பு நாளை எப்பிறப்போ? எங்கள் கையில் என்ன இருக்கிறது? இப்படியே மனிதர்கள் மனம் சலித்துக் கொண்டால் மானிட வாழ்வு என்னாவது? பிறந்ததன் பயன் என்ன? சில சித்தர்கள் மானிட வாழ்வு கூடாது என்று சொல்லவில்லை. திருமூலர் கூட உடம்பினை பாதுகாத்தால்த்தான் இறைவனை காணலாம் என்று உடம்பினை ஓம்பு என்று ஒரு வைத்தியருக்கு உரிய கரிசனையோடு அறிவுறுத்துவார். வேறு சிலர் “காயமே பொய் வெறும் காற்று அடைத்த பை” என்று உடலின் நிலையாமையைச் சொல்லுவார்கள். சித்தர்களுக்குள்ளேயே கருத்தில் சிறிய வேறுபாடுகள். இந்த வேறுபாடுகள் சாதாரண எம்போன்றவர்களின் கண்களுக்கு வேற்றுமைபோல் தெரிந்தாலும் அவர்களின் கருத்தில் ஒற்றுமை இருக்கிறது. உடம்பு பொய் என்று சொன்னார்களே ஒழிய வாழ்க்கை பொய் என்று

சொல்லவில்லை. வள்ளுவர் கூட "நில்லாதவற்றை நிலையென்று உணரும்"என்றுதான் சொன்னார்.வள்ளுவரை சும்மா வள்ளுவர் அவர்கள் என்று சொல்லாமல் "வள்ளுவக் கடவுள்"என்றார் உரையாசிரியர் மணக்குடவர். காரணம் நில்லாதனவற்றை சொல்லும்போது கேட்பவர்கள் நெஞ்சில் நிலையானவைகள் பதியப்பட்டதால் ஆகும். சும்மா நிலையாமைக்கருத்தை மாத்திரம் சொல்லக்கூடாது.வாழ்வு சப்பென்று போய்விடும்.இதனால்தான் சேக்கிழார்பெருமான் திருத்தொண்டர்புராணம் செய்தார்.இன்பம்,துன்பம் துயரம் அன்பு பக்தி உயர்வு நட்பு அஞ்சாமை கற்பு கலங்காமை இப்படி எண்ணிறைந்த கோணங்களில் தனது வியாபாரத்தை சரிவரச்செய்தார் என்று பலகருத்தைத் தரும் பெட்டகமான பெரிய புராணத்தையும் போற்றுவார். மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தம் வாழ்க்கையிலே நடக்கின்ற சம்பவங்கள் எல்லாவற்றிற்கும் ஏதோ தொடர்புகள் இருக்கும். அந்தத் தொடர்பு எப்பிறப்பிலும் பின்னிப் பிணையும்.இதனை நாம் வழிபடுதலால் வாழ்த்தியோர் வரலாற்றில் ஆலாலசுந்தரர் ஆருரர் ஆகவும் மாணிக்கவாசகர் சிவகணமாய் இருந்து வாதவூரராய் வந்த தன்மைகளையும் நாம் சாட்சிகளாய் காணலாம்.கோவலனும் கண்ணகியும் அடைந்த துன்பத்திற்கு கொலைக்களத்திலே இறந்துபட்ட சங்கமனின் மனைவி நீலி என்பாள் இட்ட சாபம் காரணமாக வருவதை:

"அரும்பொருள் வேட்கையின் பெருங்கலன் சுமந்து கரந்துறை மாக்களிற் மாதலி தன்னொடு சிங்கா வண்புகழ்ச் சிங்கபுரத்தின் ஓர் அங்காடிப்பட்டு அருங்கலன் பகரும் சங்கமன் என்னும் வாணிகன் -தன்னை
முந்தைப்பிறப்பில் பைந்தொடி கணவன்
வெந்திறல் வேந்தர்குக் கோத்தொழில் செய்வோன்
பரதன் என்னும் பெயரன் அக்கோலவன்
விரதம் நீங்கிய வெறுப்பினன் ஆதலின்
வெற்றிவேல் மன்னற்குக் காட்டிக்கொல்வுழிக்
கொலைக்களப்பட்ட சங்கமன் மனைவி
நிலைக்களங் காணாள் நீலி என்போள்
அரசர் முறையோ? பரதர் முறையோ?
ஊரீர் முறையோ, சேரியீர் முறையோ?என
மன்றினும் மறுகினும் சென்றனள் பூசலிட்டு
எழுநாள் இடைடி எல்லை சென்றபின்
"தொழுநாள் இது" எனத் தோன்ற வாழ்த்தி
மலைத்தலை ஏறி ஓர்மால் விசும்பு ஏணியீல்
கொலைத்தலை மகனைக் கூடுபு நின்றோள்
"எம்முறு துயரம் செய்தோர் யாவதும்
தம்முறு துயரம் இற் றாகுக"என்றே
விழவோள் இட்ட வழுவில் சாபம்
பட்டினர்............

என்று மதுராபதி தெய்வம் கண்ணகிக்கு அப்படியே முற்பிறப்பு சங்கதியை பட்பவர்த்தனமாக சொல்கின்றது.இதனை விதி என்று பெயரிட்டு அழைத்தால் விதி என்றால் என்ன? என்ற கேள்விக்கு பதில் வாழ்கின்ற போது மனிதனாக வாழ் அப்படி வாழத் தவறின் நீ விதியிடம் இருந்து தப்பமுடியாது.

விதி தான் கடவுள். கடவுள் தான் விதி.

நாம் செய்கின்ற நல்லதிற்கும் கெட்டதிற்கும் ஏற்ப வினையை ஊழை தொடுத்துவிடுபவர் விதிக்கடவுள்.விதிக்கடவுக்கு இன்னொரு பெயர் தொடுக்கும் கடவுள்.இதனை குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில்.......

தொடுக்கும் கடவுள் பழம்பாடல்
தொடையின் பயனே நறை பழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயில்
கேற்றும் விளக்கே வளர்ச்சிமய

இமயப்பொருப்பில் விளையாடும்
இளமென் பிடிடீய எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோவியமே மதுகரம்வாய்
மடுக்குங்குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே!
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே!!!

என்று பாடுவதில் "தொடுக்கும் கடவுள்" என்று கடவுளைச் சொன்னார். விதிவழியே தான் உயிர்போகும் என்று சொல்வது புறநானூற்றில் வரும் யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற பாடலில் விரவி வருகின்றது.இதனை யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் மிக எளிதாக விளக்குகிறார். "மாணிக்கவாசகர் திருப்பெருந்துறைக்கு குதிரை வாங்கிக்கட்டவல்லா போனார். கடைசியாக அவர் குதிரையாக வாங்கிக்கட்டினார்.கோவணம் எல்லாம் வாங்கிக் கட்டினார். இப்படியாக தொடுக்கும் கடவுள் பற்றி சொல்லுகிறார். தொடுப்பு தொடர்பு இணைவு எல்லாம் ஒரு பொருள் குறித்த பல சொல்லாகும்.

இப்படியாக விதியின் வழி செல்லும் உயிர்கரையை எட்டுவது எப்போ? அதற்கும் தொடுக்கும் கடவுள்தான் வரவேண்டும். ஆதலால் தொடுக்கும் கடவுளுக்கு எடுக்கும் கடவுள் என்றும் பெயருண்டு.இறைவன் தன் உடம்பை கொண்டு வருவார். எங்களுடைய உடம்பு கொடுத்து வந்த உடம்பு."கருணை கூர்முகங்கள் ஆறும் கரங்கள் பண்ணிரண்டும் கொண்டே ஒரு திருமுருகன் வந்து உதித்தனன் உலகம் உய்ய என்ற பாடலால் தெளியலாம்.

இறைவன் எங்களை தன்னடிக்கு எடுப்பதால் தான் எங்களுக்கு "திருவடியாதிரைக்காரர்" என்ற ஒரு பெயருண்டு.தெய்வம் சேக்கிழாரும் தன் கடைசிப்பாடலை "எடுக்கும் மாக்கதை இநநமிழ் செய்யுளாய்" என்று முடிக்கிறார்.

-----வடிவேலு ஞானகாந்தன்-------

## உள்ளம் என்பதும் ஆலயமே!

'கோயில் என்பதும் ஆலயமே குடும்பம் என்பதும் ஆலயமே' என்றதுமே கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகள் நினைவுக்கு வரும். அதன் மூலம் திருமூலர் தந்த திருமந்திரம். கோயில் என்பது தெய்வத்தின் அருள் பிரவகித்து பொங்கி எழுகின்ற இடம். ஆன்மா ஆண்டவனோடு அன்பினால் இணைகின்ற இடம். அன்பும் அருளும் பொங்கி வழிகின்ற இடம். அதே போலத்தான் குடும்பமும் கோயிலாக அமைய வேண்டும் என்பதை விளக்கத்தான், அம்மை அப்பன் பிள்ளையார், முருகன் என்று பிள்ளைகுட்டிகள் சகிதம் குடும்ப சமேதராக ஆலயங்களில் காட்சி தந்து அன்பு ஆட்சி செய்கிறார்.

கோயில் என்பது ஆலயமே! அதேபோல குடும்பம் என்பதும் ஆலயமாக இருக்கவேண்டும் என்பதுதான் கோயிலில் இருந்து நாம் படிக்கின்ற பாடமாகும். அதேபோலவே 'மூன்றாவது ஆலயம்' ஒன்று நமக்குள்ளே இருக்கிறது. 'மனிதனை நடமாடும் கோயில்' என்கிறது திருமூலர் திருமந்திரம். இறைவனை 'உள்ளத்தின் உள்ளே ஒளிக்கும் ஒருவன்' என்றும், 'உள்ளத்தை விட்டு ஓரடி நீங்கா ஒருவன்' என்றும் சொல்கிறார் திருமூலர். எம்முள்ளே ஒளிந்திருக்கும் இறைவன் உறையும் உள்ளத்தின் உணர்வலைகள் ஊற்றெடுக்கும் இந்த மனித உடலும் ஒரு ஆலயத்தின் ஒரு கூறாகும். இந்த உடலை எத்துணை கவனமெடுத்து அழகுபடுத்துகிறோம். தினமும் குளித்து சுத்தம் செய்கிறோம். விதம் விதமான அழகிய ஆடைகளை அணிந்து

மகிழ்கிறோம். அழகு சாதனங்களால் மெருகூட்டுகிறோம். எத்தனை தடவைகள் எம்மை கண்ணாடியில் பார்த்து, சரிசெய்து அகமிக மகிழ்கிறோம். இந்த உடலுக்கு நாம் செய்கின்ற அத்தனையும் மிகவும் சரியானவையே. அதேபோலத்தான் ஆண்டவனின் அருள் பொங்கும் ஆலயங்களும், உள்ளம் என்ற ஆலயமும் அழகுபடுத்தப்படவேண்டும். புனிதப் படுத்தப்பட வேண்டும். அழிந்துபோய்விடக்கூடிய, ஆன்மா பிரிந்துவிட்டால், நாறிப்போய் துர்நாற்றம் வீசக்கூடிய, தற்காலிகமான இந்த உடலுக்கே இத்தனை கவனம் செலுத்துவதுபோல, குடும்பம் என்ற ஆலயத்தை சிறப்போடு இயக்க ஓடி ஓடி உழைத்து படாத பாடுபட்டு எத்தனையோ கடமைகளை செய்கிறோம். ஆனால் இந்த இரண்டுமே நம்மோடு வரமுடியாதவைகள். அதாவது இந்த உடலும், எமது குடும்பமும் என்ற ஆலயமும் ஆன்மா பிரியும்போது கூடவருவதில்லை. அப்படியானால் பிறவிகள் தோறும் ஆன்மாவைத் தொடர்ந்து வருவதுதான் என்ன? இறைவனைத் தேடி நாங்கள் இதயசுத்தியோடு செய்கின்ற நற்செயல்களின் பலாபலன்களே புண்ணியங்களாகவும், பரமன் தந்த பகுத்தறிவை பாவிக்காமல் செய்யும் பாதகச் செயல்கள் அனைத்தும் பாவங்களாகவும் நமது ஆன்மாவை பின்தொடர்கின்றன.

பிறவிப்பெருங்கடலில் ஒரு வாழ்வை முடித்துக்கொண்ட ஆன்மாவானது, முற்பிறப்பில் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப பயனை அனுபவிக்கத்தக்க வாழ்வை அடையும் வகையில், தந்தையும் தாயும் செய்த தவப்பயனுக்கு தகுந்தபடி, அவர்களின் சேர்க்கையின்போது, தாயின் கருவறையில் உருவாகி, தெய்வீகத்தன்மையோடு மீண்டும் பிறப்பெடுக்கிறது. கிடைத்தற்கரிய மனிதப்பிறவி பெற்று வளரும்போது, ஆன்மாவின் தெய்வீகக்குணங்களை மறந்து, இழந்து, மும்மலங்களில் மூழ்கி, தீராத துன்பச்சுமையாக வாழ்வை எதிர்கொள்கிறது. பின்னர் இல்வாழ்வின் துன்பச்சுமைகளிலிருந்து மீழ்வதற்கு ஆன்மாவை சூழ்ந்திருக்கும் மும்மலங்கள் என்ற மனஅழுக்கினை அகற்றிட வேண்டி ஆண்டவனின் அருளொளி வீசும் ஆலயங்களை நாடுகிறது.

கோயில் என்ற ஆலயத்திலே, ஆண்டவனின் அருளோடு எமது மனதின் உணர்வலைகளை சங்கமிக்கவைக்கிறோம். எங்கள் ஆன்மாவை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்கிறோம். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று நால்வகைத் தொண்டுகள் மூலம், மனதின் அழுக்கினை அகற்றி, அன்பே உருவான ஆண்டவனை எங்கள் உள்ளம் என்ற ஆலயத்தில் குடியிருத்த விழைகிறோம். இறை என்னும் பேரொளியை இதயத்தில் குடியிருத்த முன்னர் ஆன்மா தனது அழுக்கேறிய முகத்திரைகளை கிழித்து எறிந்துவிட வேண்டும். அழுக்கு நிறைந்த போலியான, பொய்யான செயற்பாடுகளை அறவே அழித்து ஒழித்து, என்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் எம்பிரானோடு அன்புப்பிணைப்பினை ஏற்படுத்தும் வகையில் புனிதமான உள்ளத்தை திறந்து வைத்திருக்க வேண்டும். அன்பும் பணிவும் நிறைந்த, சுயநலமற்ற திருத்தொண்டில் தன்னை இணைத்துக்கொள்ள வேண்டும்.

சரியைத்தொண்டு என்றதுமே எங்கள் நினைவுக்கு வருபவர் அப்பர் சுவாமிகள். ஆலயங்களை சுத்தப்படுத்திய உழவாரத்தொண்டு செய்தே ஆண்டவனை அடைந்தார் அப்பர் சுவாமிகள். ஆண்டவனின் அடியார்களுக்கு அமுது படைக்கும் திருத்தொண்டை செய்து ஆண்டவனின் அடியை அடைந்தவர் சிறுத்தொண்டர் நாயனார். "மண்ணில் பிறந்தார்பெரும் பயன் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தலே' என்ற திருஞானசம்பந்தப் பெருமானின் அருள் வாக்கிற்கமைய,பெறும்பயன்களில் பெரும் பயன் பெற, அடியார்களுக்கு அமுது படைக்கும் திருத்தொண்டில், ஆலயத்தின் மடப்பள்ளிக்கடமைகளில் நம்மை இணைத்துப் பயன் பெறவேண்டும். நாங்கள் வழக்கமாக உண்பதை சாதம் என்கிறோம். அதை ஆலயத்தில் பெறும்போது பிரசாதம் என்கிறோம். ஆலயத்தில் அடியவர்களுக்கு அமுது படைக்கிறோம் என்ற தொண்டர்களின் மகிழ்ச்சி உணர்வு பிரவகித்து அவர்கள் சமைக்கின்ற அந்தச்சாதத்துடன் சேர்கின்றது. அந்த உணர்வலைகளின் (**VIBRATIONS**) தாக்கம், சாதத்தை பிரசாதமாக்குகிறது. அந்தப்பிரசாதத்தின்மீது தெய்வத்தின் அருட்சக்தி அலைகள் சேரும்போது அது அருட்பிரசாதமாக நமக்கு கிடைக்கிறது. அதனால்த்தான் ஆலயத்தில் கிடைக்கும் வெறும் சாம்பாரும் சாதமும் அருஞ்சுவையாக இருக்கிறது.

சரியைத் தொண்டில் மட்டுமல்லாது, ஆலயத்தில் நிகழும் கிரியைகளிலும் பங்கு கொண்டு, நாம் வேண்டுவனவெல்லாம் தந்தருளும் பரம்பொருளின் வரம் பெற்று, பெரும் மன நிறைவோடு **'அன்பே சிவம்'** என்ற மூலதத்துவத்தை சிந்தையில் கொண்டு, பால் **நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து எம்மீது அருள்மழை பொழியும் ஆண்டவனின் அன்புக்குழந்தைகள்தான் அனைவரும் என்பதனை மனதில் நிறுத்தி, அனைத்து ஆனமாக்களையும் உலகின் தந்தையும் தாயுமான ஒருவன் படைத்ததினால், உறவு முறையில் அனைவரும் 'சகோதர உறவைக்' கொண்டவர்கள் என்பதைப் புரிந்து, நான் என்ற அகங்காரமும், அறியாமையும் அகலப்பெற்று, அன்பும் பணிவும் நிறைந்த ஆராதனைகளையும், திருத்தொண்டையுமே தெய்வம் மனமகிழ்ந்து ஏற்கின்றது என்ற பேருண்மையை புரிந்து, உலகமகாசக்தியின் பேரருளைப்பெறும் புனிதமான ஆலயமாக எங்கள் உள்ளம் என்ற கோயிலை அமைத்து,** குடும்பமும் கோயிலாக எமது கடமைகளை செய்து, எம் வாழ்வில் ஒளியேற்றும் தெய்வத்தின் அருள் பொங்கும் ஆலயத்தின் திருத்தொண்டிலும் வளர்ச்சியில் எம்மையும் இணைத்து இல்வாழ்விலும், மறுவாழ்விலும் ஈடேற்றம் பெறுவோமாக!

ஆக்கம்: க.நடராஜா

## சாண்டில்ய முனிவர் சொன்ன பிரதோசக் கதை

விதர்ப்பதேசத்தைச் சேர்ந்த ஓர் அந்தணப் பெண் தந்தையை இழந்த தன் மகனுடன் யாசகம் செய்து பிழைத்து வந்தாள்.

அப்பெண்மணி சிவபெருமானிடம் சிறந்த பக்தியும் அப்பக்தியால் பணிவும் பரந்த உள்ளமும் கொண்டிருந்தாள். ஒரு முறை தனது கைக் குழந்தையுடன் ஓர் அடர்ந்த கானகத்தின் வழியாகச் சென்று கொண்டிருந்தாள். செல்லும் வழியிலே சற்றுக் களைப்பு நீங்க ஓர் மரநிழலில் அமர்ந்தாள். அப்பொழுது அவ்விடத்தில் ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டது! பெண்மணி வியப்புற்றாள். திக்குத் தெரியாத காட்டில் குழந்தையின் அழுகுரல் கேட்கிறதே! இக்குரல் எங்கிருந்து வருகிறது என்று தனக்குள் எண்ணியவாறு அழுகுரல் வந்த திசைநோக்கிச் சென்றாள்.

செடி கொடிகளின் நடுவே ஒரு அழகான குழந்தை அநாதரவாக படுத்துக்கொண்டிருந்தது.பெண்மணிக்கு ஒன்றும் புரியவில்லை தன் பிள்ளைக்கே கஞ்சிக்கு வழி இல்லாதபோது யார் பெற்ற பிள்ளையையோ எடுத்து வளர்ப்பதா? தெய்வமே இது என்ன சோதனை? நானே வறுமையில் வாடுகிறேன். "நான் எப்படி இக்குழந்தையைக் காப்பாற்ற முடியும்" என்று சொல்லி அழுதாள். இறைவனை நினைத்து உருகினாள். அதே சமயத்தில் அக்குழந்தையின் அழகும் அக்குழந்தையால் தனக்கு ஏற்பட்ட குழந்தைப்பாசமும் உள்ளத்தை பெரிதும் வாட்டியது. அப்பொழுது விண்வெளிவழியே ஓர் அசரீரி எழுந்தது.

"பெண்மணியே! கவலையுறாதே! இக்குழந்தையை நீ வளர்ப்பாயாக! இவன் ஓர் சத்திரிய ராஜகுமாரன். தர்மகுப்தன் என்பது இவன் பெயர்.உங்களுக்கு சர்வமங்களமும் ஒண்டாகும்".

பெண்மணிக்கு தைரியம் பிறந்தது. அக்குழந்தையையும் அன்போடு தூக்கிக் கொண்டாள். இரண்டு குழந்தைகளையும் கண்ணின் மணிபோலக் காத்துவரலானாள். அப்பெண்மணிக்கு வறுமை சற்றுக் குறையத்தொடங்கியது. சத்ரிய குமாரனை வளர்க்கும் பாக்கியத்தை அளித்த பரந்தாமன் அப்பெண்மணிக்கு குழந்தைகளை வைத்துக் காப்பாற்றுவதற்கான செல்வத்தையும் அளித்தான். வருஷங்கள் செல்ல செல்லப் பிஞ்சுக்குழந்தைகளும் பிரபஞ்சத்தில் மெல்ல மெல்ல பிஞ்சு அடிகளை பதித்து பதித்து வளரலாயினர். உரிய பருவத்தில் அப்பெண்மணி இரு குமாரர்களுக்கும் உபநயனம் செய்து வைத்தாள்.பூர்வஜென்ம புண்ணியத்தால் ஒரு முறை அப்பெண்மணி தன் குழந்தைகளுடன் சாண்டில்ய முனிவரைத் தரிசிக்கும் பெரும் பேறு பெற்றாள். உருத்திராட்ச மாலைகளும் திருவெண்ணீறும் அணிந்து சிவஜோதியாக விளங்கிய

மாமுனிவரைக் கண்டு மெய்யுருகினாள். அவரது திருவடிகளை பன்முறை நமஸ்கரித்தாள். இரு குழந்தைகளும் மாமுனிவரை நமஸ்காரம் செய்தனர். "சர்வமங்களமும் உண்டாகட்டும்" என்று அருள்பாலித்தார் மாமுனிவர்!!!. அப்பெண்மணி சுவாமிகளிடம் தனது விருத்தாந்தங்களை கூறலானாள்.

"சுவாமி! அடியேன் விதர்ப்பதேசத்தைச் சேர்ந்தவள். ஒருவன் என் சொந்த மகன். இன்னொருவன் என் வளர்ப்பு மகன். இவர்களை நல்லபடியாக வளர்த்து ஆளாக்க முடியாமல் துன்பப்படுகிறேன். எங்கள் துயரம் நீங்க தேவரீர் ஏதாகிலும் ஒரு உத்தம மார்க்கத்தை உவந்தளிக்க வேண்டும்." இவ்வாறு பெண்மணி பயபக்தியுடன் விண்ணப்பித்ததும் முனிவர் சற்று நேரம் நிஷ்டையில் அமர்ந்தார்.பிறகு கண்விழித்தார். மூவரையும் முகம் மலர நோக்கினார். "குழந்தைகளே! கவலைப்படாதீர்கள். உங்களுக்கு சகல சௌபாக்கியங்களும் ஏற்படுவதற்கான பிரதோஷ விரதத்தைப் பற்றி கூறுகிறேன். அவ்விரதத்தை நான் சொல்வது போல் அனுஷ்டித்து வந்தால் உங்கள் துன்பம் விலகும். இன்பம் பெருகும் இறைவன் அருளும் கிட்டும். "சுவாமி! உங்கள் அருளாணைப்படி அவ்விரதத்தை நானும் என் குழந்தைகளும் முறையோடு அனுஷ்டிப்போம்." மகரிஷி மனம் மகிழ்ந்தார். "ஆண்டவனின் அருளைப்பெறுவதற்காக நாம் அனுஷ்டிக்கும் இவ்வுலகிலுள்ள பலவகை விரதங்களில் சிவபெருமானுக்கும் நந்திதேவருக்கும் மகிழ்வான பிரதோச விரதமும் ஒன்று. இப்பிரதோச விரதத்தை முறையோடு அனுஷ்டித்து வந்தால் கோடிக்கணக்கான நற்பலன்கள் தானாகவே வந்து நம்மையடையும்"என்று கூறிய முனிவர் பிரதோசத்தின் சிறப்பைப் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.அவ்விரதத்தை எவ்வாறு அனுஷ்டிக்க வேண்டும் என்பதனை பற்றியும் அவர்களுக்கு உபதேசித்தார்.

மூவரும் மட்டில்லா மகிழ்சி பூண்டனர். முனிவரை வலம் வந்து நமஸ்கரித்தனர்.முனிவர் மூவர்க்கும் பரிபூரண ஆசி நல்கினார்.இல்லறத்தை அடைந்த அம்மூவரும் முனிவர் உபதேசத்தின்படி பிரதோஷவிரத்ததை அனுஷ்டிக்கத் தொடங்கினர்.சிறிதுகாலம் பிரதோச விரதத்தை அனுஷ்டித்து வந்தனர். ஒரு நாள் குமாரர்கள் இருவரும் தீர்த்தக் கரைக்கு நீராடச் சென்றனர். வழக்கம் போல் நீராடிவிட்டு கரையேறினர். அது சமயம் அந்தண குமாரன் கண்களில் கரையோரம் அபூர்வமான பொருள் தென்பட்டது. அந்தணகுமாரன் மண்ணினுள்ளிருந்து கண்டெடுத்தது ஒரு பொற்குடம். இதற்குள் சத்திரிய குமாரனும் குளித்துவிட்டு கரையேறினான். அந்தண குமாரன் பொற்குடத்தை அவனிடம் காண்பித்தான். அவனும் அதிசயத்தால் திகைத்து நின்றான். பொற்குடத்தின் மூடியை திறந்து பார்த்தனர். அதற்குள் ஏராளமான பொன் நகைகளும்வைரமணிகளும் இருப்பதைக் கண்டனர். அவர்கள் கண்களை அவர்களால் நம்பமுடியவில்லை.பொற்குடத்தை வஸ்திரத்தால் மூடி மறைத்துக் கொண்டு வீட்டிற்கு புறப்பட்டனர்.

காற்றினும் கடுக வந்த இருகுமாரர்களும் அன்னையாரிடம் ஆற்றங்கரையில் நடந்த நிகழ்ச்சியை பற்றிக்கூறினர்.பொற்குடத்தை காண்பித்தனர். பிரதோஷ விரத மகிமையினால் சர்வந்வரன் தங்களுக்கு இத்தனை பெரிய செல்வத்தை அளித்துள்ளார் என்று மூவரும் மகிழ்ந்தனர். 'என் அன்புச்செல்வங்களே! நடனம் புரியும் நாயகனின் அருள் உங்கள் மீது வீழ்ந்து விட்டது. பகீரதனுக்காக கங்கையைப் பெருகவிட்டு பரந்தாமன் பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படிபட்ட சர்வேச்சரன் மீனாட்சியம்மைக்காக நான்மாடக்கூடல் வீதிகளில் நான் மறைசூழநாளெல்லாம் பொன்னும் மணியும் வாரி வழங்கியுள்ளார். நீங்கள் இருவரும் இதனைப் பகிர்ந்து எடுத்துக் கொள்ளுங்கள்." தாயின் மொழி கேட்டு அந்தண குமாரன் தாயிடம் பொற்குடத்தை அன்போடு கொடுத்தான். தர்மகுப்தன் குழம்பினான். அன்னையின் சொல்லை மீறுவதா என்று அவன் மனம் சற்று எண்ணியபோதும் சத்திரிய தர்மத்தை உணர்ந்திருந்த அவன் தாயிடம் தன் மனதில் பட்டதை துணிந்து சொல்லிவிட்டான். "தாயே! என்னை மன்னிக்க வேண்டும்", "என்ன சொல்கிறாய் தர்மகுப்தா!" என்று தாய் கேட்க "தீர்த்தக்கரையில் பொற்குடத்தை முதலில் கண்டது அண்ணன் தான். அதனால் இது அவனுக்குத்தான் சொந்தம். இதில் நான் பங்கு பெறுவதற்கு விரும்பவில்லை. புதையலை நானும் பகிர்ந்து கொள்வது தர்மமுமல்ல.அதனால் இதனை அவனே வைத்துக்கொள்ளட்டும். என்றான் தர்மகுப்தன்.

தர்மகுப்தனின் மொழிகேட்டு தாயும் மகனும் ஒரு கணம் துணுக்குற்றனர். இருவரும் தர்மகுப்தன் எண்ணத்தை மாற்ற பலவழிகளில் மன்றாடினர்.அன்னையோ தனக்குத் தெரிந்த தர்மவிதிமுறைகளை எடுத்துரைத்து அவனது மனதை மாற்ற முயன்றாள். அத்தனையும் செவிடன் காதில் ஊதிய சங்கு போல் ஆயிற்று. விழலுக்கு இறைத்த நீர் போலானது. புதையலில் பாதியைப் பெறுவற்கு அரசகுமாரன் அறவே மறுத்துவிட்டான். அதற்கு மேல் அவனது சகோதரனோ தாயோ புதையலைப்பற்றி எதுவும் பேசவில்லை. ஆனால் தாய்க்கு மட்டும் ஓர் அச்சம் ஏற்பட்டது.தர்மகுப்தன் தங்களைவிட்டுப் பிரிந்து போய்விடுவானோ என்று பயந்தாள். "தர்மகுப்தா! புதையலை ஏற்றுக் கொள்ள உன்மனம் விரும்பவில்லை என்பதற்காக நான் வருந்தவில்லை. இக்காரணம் கொண்டு நீ எங்களைவிட்டுப் பிரிந்து போய்விடுவாயோ என்றுதான் வேதனைப்படுகிறேன். "தாயே! அந்த வருத்தம் வேண்டாம். கானகத்தில் கிடந்த என்னை கஷ்டப்பட்டு வளர்த்து ஆளாக்கிவிட காலமெல்லாம் துன்பப்பட்ட தங்களுக்கு எந்த ஜென்மம் எடுத்தாலும் நன்றிக்கடன் செலுத்தத் தவறமாட்டேன். தாங்கள் அன்புக்கட்டளையை மீறி ஒரு போதும் பிரியமாட்டேன். இது சத்தியம்."

புத்திரனின் பாச மொழிகேட்டு வளர்த்தவளின் மனம் வண்ணமலர் போல் மலர்ந்தது. தர்மகுப்தனை உச்சிமோந்து உளம் குளிர்ந்தாள். குழந்தாய்! சர்வேச்வரன் திருவருளால் உனக்கும் வெகுவிரைவில் அரசாளும் பாக்கியம் கிட்டும்" என்று ஆசி கூறினாள் தாய். அன்னையின் ஆசிமொழிகேட்டு தர்மகுப்தன் பதினெட்டு புராணத்தையும் கேட்டு மகிழ்ந்தாற் போல் பேரின்பம் பூண்டான்.அன்னையைப் பன்முறை நமஸ்கரித்தான். இத்தனை நாளும் ஓரளவு வறுமையுடன் வாழ்ந்த இவர்கள் ஒரேயடியாகவே வறுமை நீங்கப் பெற்று வளமுடன் வாழத் தொடங்கினர். பிரதோஷ பூஜையை அவர்கள் மேலும் மிகச்சிறப்பாக கொண்டாடி வந்தனர். தான தருமங்களைச் செய்தனர்.அன்று ஒருநாள் வைகறைப்பொழுது சகோதரர்கள் இருவரும் வழக்கம் போல் துயிலெழுந்தனர். தூய நீராடினர். நம சிவாய மந்திரத்தை ஜபித்து திருவெண்ணீற்றையும் உருத்திராட்ச மாலைகளையும் அணிந்து கொண்டனர். அடுத்துள்ள சிவன் கோவிலுக்குச் சென்றனர். எம்பெருமானைக் கண்குளிரக் கண்டு களித்தனர். இருவரும் வீட்டிற்குப் புறப்பட்டனர். இரு சகோதரர்களும் அழகிய வனத்தின் வழியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். எங்கு பார்த்தாலும் ஓங்கி உயர்ந்த கனி குலுங்கும் மரங்கள். மலர்ச்சோலைகள் வண்ணத்தடாகங்கள். தென்றல் ரம்மியமாக வீசிக்கொண்டிருந்தது.வாசமலரின் நறுமணம் வனம் எங்கும் பரவி நிறைந்திருந்தது.சகோதரர்கள் இருவரும் அந்த இன்ப சுகத்தில் சற்று நேரம்ஒரு பாறை மீது அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்தனர். அப்பொழுது திடீரென்று எங்கிருந்தோ எழுந்த பெண்களின் சிரிப்பொலி காற்றோடு கலந்துவந்து தர்மகுப்தன் செவிகளில் தேன்போல் பாய்ந்தது. தர்மகுப்தன் எழுந்து பாறைமீது நின்று பார்த்தான். சற்றுத் தொலைவில் ஓர்அழகிய தடாகத்தில் அழகிய பெண்ணொருத்தி நீராடுவதைக் கண்டான். அக்காட்சியை அந்தணகுமாரனுக்கும் காண்பித்தான். அந்தண குமாரன் வெட்கத்தால் தலை குனிந்தான். ஆனால் தர்மகுப்தனோ அத்தடாகத்தருகே சென்று அந்த அழகிய பெண்ணைக்காண ஆசை கொண்டான். அந்தண குமாரனை அழைத்தான். ஆனால் அவன் வர மறுத்தான். "தர்மகுப்தா! நாம் தர்மம் தெரிந்தவர்கள். பெண்கள் ஜலகிரீடை செல்லும் இடத்திற்கு நாம் செல்லல் ஆகாது. அதிலும் பிரம்மச்சாரிகள் ஆன நாம் செல்லவே கூடாது என்பது சாஸ்திரம் அல்லவா?" அதனால் சீக்கிரம் வீட்டிற்கு செல்வோம். அவனது தர்மஞானத்தை தர்மகுப்தனும் அறிந்திருந்தான். இருப்பினும் அவன் மனம் மட்டும் அங்கு செல்லவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தது. அவன் சகோதரனை பல்வேறு சொல்லி தன்னுடன் தடாகத்துக்கு வருமாறு அழைத்தான்.

அந்தணகுமாரன் தர்மகுப்தனின் எண்ணத்திற்கு மட்டும் இணங்கவில்லை. 'தர்மகுப்தா! நான்வீட்டுக்குப்போகிறேன். நீ வேண்டுமானால் அங்கு சென்று விட்டுவா" உன்று கூறிய அந்தண குமாரன் அவனது பதிலை சற்றும் எதிர்பாராமல் வேகமாகப் புறப்பட்டுச் சென்றான். அந்தண குமாரன் சென்றதும் தர்மகுப்தன் ஆசையால் உந்தபட்டு தடாகத்தை நோக்கிப்புறப்பட்டான். தர்மகுப்தன் அவ்விடததை அடைவதற்கும் சற்று முன் அவன் கண்ட பெண்மணி குளித்துவிட்டு தனது தோழிகளுடன் கரைக்கு வருவதற்கும் சரியாக இருந்தது. தர்மகுப்தனும் அப்பெண்மணியும் நேருக்கு கேராக சந்தித்தனர். இருவர் கண்களும் கருத்தும்

கலந்து உறவாடின. இருவரும் சற்று நேரம் சிலையாய் நின்றனர். இருவரது உள்ளங்களிலும் மன்மதனது கரும்பு வில்லிலிருந்து புறப்பட்ட மலர்க்கணைகள் படாதபாடுபடுத்தியது.
தர்மகுப்தன் அப்பெண்மணியின் பேரழகைக்கண்டு அதிசயித்தான். அவள் யார்? தேவலோகத்திற்கு கன்னிகையா? அல்லது பூலோகத்துக்கு ஊர்வசியா? எந்த தேசத்திற்கு இளவரசியோ? இப்பேற்பட்ட அழகு சுந்தரியைக்கண்டு களிக்க எத்தனை பெரும் புண்ணியம் செய்தோமோ? இவளையே மனைவியாக அடைவதற்கு இறைவன்தான் அருள்புரியவேண்டும்.என்றெல்லாம் பலவாறு தனக்குள் எண்ணி எண்ணி ஏங்கிநின்றான் தர்மகுப்தன். அதேசமயத்தில் தர்மகுப்பதனின் மார்பிலே காணப்பட்ட உருத்திராஷ மாலைகளும் திருமேனியிலே துலங்கும் திருவெண்ணீற்றுப்பொலிவும் கண்டு அப்பெண்மணியும் தன்னை மறந்தாள். என்றுதான் சொல்ல வேண்டும் இவர் முருகப்பெருமானோ? மன்மதனோ? வித்தியாதரனோ? மாபெரும் சிவபக்தனோ இப்புண்ணிய புருஷர் யாராக இருக்கலாம்? இவரைக் கணவராக அடைவதற்கு எத்தனை புண்ணியம் செய்திருக்க வேண்டும். என்றெல்லாம் எண்ணினாள் அந்த ஏந்திழையாள். இவ்வாறு ஏங்கி நிற்கும் அப்பெண்மணியின் நிலைகண்டு தோழியர்களுக்கு சிரிப்பு வந்தது. அவர்கள் அதனை அடக்கிக் கொண்டு "தேவீ! தேவீ!" என்று பன்முறை குரல் கொடுத்தனர். திடுக்கிட்டு சுய நினைவுக்கு வந்தாள் அப்பெண்மணி. "என்ன தேவீ! நீரின் குளிர்ச்சி தங்களை இப்படி விறைந்து நிற்கும்படி செய்து விட்டதோ? வெட்கத்தால் நாணி நின்ற பெண்மணியின் கண்கள் பூப்போல் மலர்ந்தன. தர்மகுப்தனை ஓரக்கண்ணாலே பார்த்துக்கொண்டே தோழியர்களுடன் வேறுபுறம் சென்றாள். தர்மகுப்தனும் அவர்கள் அறியாதவாறு பின்னால் தொடர்ந்து சென்றான்.வேறுபக்கம் சென்றதும் பெண்மணியின் நயனங்கள் நாற்புறமும் சுழலத் தொடங்கின. ஆற்றின் கரையோரம் தான் கண்ட அலங்காரரூபனைக் காணவில்லையே என்று ஒரு ஏக்கம் கலக்கம். பாவம் அப்பொற்கொடியாளின் மைவிழி சிவந்தன. மலர்க் கன்னங்கள் வாடிற்று.கைவளையல்கள் நழுவும் முன்னர் நலம் சேர்க்க வந்த நாயகனும் அவள் எதிரிலே வந்து நின்றான். தர்மகுப்தனை கண்டதும் அப்பெண்ணின் தாமரை முகம் தேன்சிந்திச் சிவந்தது. அவனுடன் பேச அவளது அதரங்கள் துடித்தன.அதற்குள் அவன் மிஞ்சினான்.. தர்மகுப்தன் இதழ்களிலே குறுநகை சிந்த அவளைப்பார்த்து சுந்தரவதீ ! நீ யாரென்று நான் அறியலாமா? என்று குழலைப் பழிக்கக் கேட்டான். சுவாமி! என் பெயர் அஸ்ருமதி! வித்ரவிகன் என்னும் நாமமுடைய கந்தர்வவேந்தனின் புதல்வி. யாழை பழிக்கச்சொன்னாள் அஸ்ருமதி. அஸ்ருமதி எத்தனை அழகான பெயர். என்று உணர்சி பொங்க சொன்னான். அஸ்ருமதி தொடர்ந்தாள். சுவாமி! நானும் என் பெற்றோர்களும் சிவநாமத்தையே சிந்தையில் கொண்டு ஒழுகுபவர்கள். தேவருடைய நெற்றியிலே பிரகாசிக்கும் திருவெண்ணீரும் மேனியிலே துலங்கும் உத்திராஷ மாலைகளும் என்னைத் தங்கள் பால் மனதைலயிக்கும்படி செய்து விட்டது. தங்களை இன்னாரென்று அறிவதற்கு ஆவல் மிக்கவளாக துடிக்கிறேன்".

"என் பெயர் தர்மகுப்தன் நான் ஒரு சத்திரியன் விதர்ப்ப தேசத்தைச் சேர்ந்தவன். விதி வசத்தால் வசதியான வாழ்வு காணமுடியாமல் வருந்துகிறேன். சித்தமெல்லாம் சிவன் பால் வைத்து நித்தம் நித்தம் அவனையே நினைத்து வாழ்கிறேன். அசனுக்குப் பிரியமான பிரதோச விரதத்தை தவறாமல் கடைப்பிடித்து வருகிறேன். என்றைக்காவது என் ஐயனின் அருள் எனக்குக் கிட்டும் என்ற பூரண நம்பிக்கை உண்டு. சுவாமி! தங்களைக் கண்டது முதல் என் உள்ளம் ஒரு நிலையில் இல்லை நான் என்னை மறந்தேன். என்நிலையை மறந்தேன். உலகையே மறந்தேன். நானும் அப்படித்தான். ஆனால்.......... தங்களின் நிலையை எண்ணிப்பார்க்கும் போது எந்நிலை முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட கதை போலாகி விடுமோ என்று தோன்றுகிறது. ஏற்றத்துடன் வாழும் தாங்கள் எங்கே? ஏழ்மையில் வாழும் நான் எங்கே? எதற்கும் ஒரு தகுதி தேவை இல்லையா?

"நான் எண்ணியுள்ள அத்தனை தகுதிகளும் தங்களிடம் காணப்படுகிறது. சுவாமி! தாங்கள் சிவநேசச் செல்வர். நம சிவாய மந்திரத்தைத் தியானிப்பவர். வாழ்வில் ஏற்றத் தாழ்வைப் பற்றி எண்ணிப் பார்ப்பதில்லை. நான் உங்களைக் கண்ட மாத்திரத்திலேயே உங்களிடம் நானும் என் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டேன்.அதனால் இனிமேல் நமக்குள் பிரிவுக்குச் சற்றும் இடமில்லை. எனது அன்பின் அடையாளமாக இந்த முத்தாரத்தை அளிக்கிறேன். என்று

ஆசையோடு சொன்ன அஸ்ருமதி முத்தாரத்தை கழற்றி தர்மகுப்தனிடம் கொடுத்தாள். அவனும் அதனை வாங்கி அகமகிழ்வோடு அணிந்து கொண்டான்.
அத்தருணத்தில் மலர்கொய்யச்சென்ற தோழியர் வரும் சத்தம் கேட்டது. உடனே அஸ்ருமதி ! சுவாமி! நாளை இந்த நேரத்ததில் இதே இடத்தில் நாம் சந்திப்போம் என்று கூறி மின்னலாக மறைந்தாள். தர்மகுப்தன் கந்தர்வகுமாரி நினைவாகவே வீட்டிற்குத் திரும்பினான். தர்மகுப்பதனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் தாய். கழுத்திலே உருத்திராஷ மாலையுடன் முத்துமணிமாலை அணிந்துவரும் மகனைப்பார்த்து தர்மகுப்தா! ஏது இந்த முத்துமாலை என்று கேட்டாள் அன்னை. தர்மகுப்தன் தடாகத்தருகே நடந்த அத்தனை விருத்தாந்தங்களையும் கூறினான். அன்னைக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. எதுவும் தெய்வ சங்கல்ப்பம் போலத் தானே நடக்கும். நாளை உனக்கு நடக்க இருக்கும் ஒரு சுபகாரியத்துக்காக வேண்டி முன்னதாகவே இந்நிகழ்சி நடந்துள்ளதோ? குழந்தாய்! நீ எதற்கும் கவலை கொள்ளாதே! நாளை உன்னுடன் நானும் உன் சகோதரனும் தடாகத்திறகு வருகிறோம்.அந்த ராஜ குமாரியை நேரில் பார்த்து மற்ற விபரங்களைப் பற்றி பேசுவோம். அன்னையின் அன்புமொழிகள் தர்மகுப்தனின் செவிகளில் தேன்போல் பாய்ந்தது. சிவநாமத்தை சிந்தையிலே கொண்டான். எப்பொழுது பொழுது புலரும் என்று எண்ணியவாறு ஏக்கத்துடன் இராப்பொழதைக் கழித்தான். இ:.து இவ்வாறு இருக்க தடாகத்தை விட்டகன்ற கந்தர்வகுமாரி தனது பெற்றோர்களிடம் சென்று நடந்தவற்றைக் கூறினாள்.

புத்திரியின் பேச்சைக்கேட்டு அதிர்சிஅடைந்தான் கந்தர்வராஜன். அதே சமயத்தில் தனது அன்பு மகளின் ஆசைமுகத்தை பார்த்ததும் அவன் உள்ளம் படாதபாடுபட்டது. மகளிடம் தனது உள்ளக்கிடக்கையைச் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவித்தான். எதற்கும் எல்லாம்வல்ல இறைவனைத் தரிசித்து முடிவுகாண்பது என்ற தீர்மானத்துக்கு வந்தான். கந்தர்வராஜன் யாழில் சிவநாமத்தை சுந்தரகீதத்தில் இசைத்தவாறு திருக்கைலாய மலைக்குப் புறப்பட்டான்.

திருக்கையால மலையில் சிவமுனிவர்கள் வேதமுழக்கம் செய்துகொண்டிருக்க நந்திதேவர் சிவக்கோவிலின் திருவாயிலில் உடைவாளும் பொற்பிரம்பும் ஏந்தியவாறு காவல் புரிந்துகொண்டு நின்றார். கந்தர்வராஜன் யாழில் பண்ணிசைத்தான். நந்திதேவரை மும்முறை வலம்வந்தான். விரிசடை நிலையில் நிலாசூடிய வேணிபிரானைத் தரிசிக்க அனுமதிகேட்டான். நந்திதேவரும் அக்கணமே அகத்துள் சென்று எம்பெருமானிடம் அனுமதிபெற்றுவந்தார். கந்தவர்ராஜனும் நந்திதேவரை வணங்கி சர்வேச்சரனை தரிசிக்க சிவக்கோவிலுக்குள் சென்றான். சிவக்கோவிலுள் சர்வேச்வரன் சங்கரியுடன் நவரத்தின மணிபீடத்தில் ஆயிரம்கோடி சூரியன் ஒன்றாக உதித்தாற் போன்ற பேரொளியுடன் எழுந்தருளியிருந்தார். கந்தர்வராஜன் இறைவனையும் இறைவியையும் நமஸ்கரித்தான். கானத்தால் கைலை நாதனைக்குளிரச் செய்தான் கந்தவர்மன்னன்.

தேவாதி தேவா! அகில லோகங்களும் போற்றும் வேத சொருபனே! மங்களகரனே ! சிருஷ்டிக்கும் மேலான சங்காரக கர்த்தாவே! நமஸ்காரம். அண்டிவந்த அடியார்களுக்கு ஸர்வாபீஷ்டங்களையும் கொடுத்தருளும் வல்லமை தேவரீர் ஒருவருக்குத் தானே உண்டு. அதனால் ஐயன் அருள் கூர்ந்து அனுக்கிரஹம் செய்யப் பிரார்த்திக்கிறேன்." வித்ரவிகா! உன் தோத்திரத்தாலும் கந்தர்வ கானத்தாலும் யாம் மகிழ்ந்தோம். யாது வரம் வேண்டும்?
பிரபோ! தேவரீர் அறியாதது என்று ஒன்று இவ்வுலகில் உளதோ? இருப்பினும் அடியேன் விண்ணப்பிக்கிறேன். எளியோனின் மகள் அஸ்ருமதி மானிடன் மீது மயக்கம் கொண்டாள், அவனையே விவாஹம் புரிவதாக சங்கல்பம் பூண்டுள்ளாள். இந்த நிலையில் எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.இதனால் தேவரீருடைய அருள் ஆணையைப்பெற்றுப் போக வந்துள்ளேன்."

"வித்ரவிகா! உனக்கு சகல மங்களமும் உண்டாகட்டும்." உன் புத்திரியை அவள் மனம் போலவே தர்மகுப்தனுக்கு செய்விப்பாயாக! அவன் அரசகுலத்தில் பிறந்தவன். அறநெறிவழுவாச் செல்வன். எம்மிடம் இடையறாது பக்தி பூண்டொழுகுபவன். பிரதோச கால பூஜையைத் தவறாமல் அனுஷ்டித்து எம்மை வழிபடும் அன்புத்தொண்டன். அவனுக்கு

உன்குமாரத்தியை விவாகம் செய்து வைப்பதோடு அவனுடைய ராஜ்யத்தை அவன் மீண்டும் அடைவதற்குத் தக்க சேனைகளையும் கொடுத்து போருக்கான உதவிகளையும் செய்வாயாக”. இவ்வாறு எம்பெருமான் திருவாய் மலர்ந்து அருளியதும் கந்தர்வராஜன் பேருவகை பூண்டான். பெருமானைப் பணிந்து பன்முறை போற்றி போற்றி துதிபாடினான். தன் மகளுக்கு அவள் மனம் போல் மாங்கல்யம் கிட்டியதே என்று ஆனந்தித்தான்.அரனாரின் அன்பு கட்டளையை நிறைவேற்ற கந்தர்வராஜன் புறப்பட்டான். கந்தர்வராஜன் தனது அரண்மனைக்கு விரைந்தான். எம்பெருமான் திருவாய் மலர்ந்து அருளிய அமுதத் திருவாசகத்தை அன்பு மகளிடம் வாஞ்சையோடு விளம்பினான். ராஜகுமாரியின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

கந்தர்வராஜன் மகளிடம் “அஸ்ருமதீ! நாளை உன்னுடன் நானும் வருகிறேன். உன் விருப்பம் போல் நாளைக்கே உங்கள் திருமணத்தையும் முடித்து வைக்கிறேன். அதற்கான ஏற்பாட்டை இப்பொழுதே தொடங்குகிறேன்” என்றான். ராஜகுமாரி தந்தையாரின் அன்பு மொழிகேட்டு இன்பக் கடலுள் மிதந்தாள். விடிந்ததும் நடக்கப்போகும் சுப காரியத்தை நினைத்துக் கொண்டே மலர்ப்படுக்கையில் உறக்கம் வராமல் புரண்டு கொண்டே இருந்தாள். பொழுது புலர்ந்தது. புள்ளினங்கள் ஆர்த்தன. கோவிலில் காலை முரசம் முழங்கியது. அரண்மனை வாயிலிருந்து அணி தேர் புரவி ஆட்பெரும்படைகள் புறப்பட்டன. பொன் வண்ணத் தேரில் மன்னனும் மகாராணியும் புறப்பட்டனர்.அஸ்ருமதி பல்லக்கில் புறப்பட்டாள். மங்கள வாத்தியங்களும் இன்னிசை கோஷங்களும் நடந்து கொண்டே இருந்தன. வேதவிற்பன்னர்களும் தவ முனிவர்களும் மன்னனுக்கு அருள் செய்ய உடன் சென்றனர்.

பல்லக்கிலே தங்க நிலா போல் அழகு ஆபரணம் அணி செய்ய அமர்ந்திருந்த அஸ்ருமதி தனது தந்தையின் ஒவ்வொரு ஏற்பாட்டையும் கண்டு அதிசயித்தாள். தடாகத்தைச் சுற்றி இரவோடு இரவாக ஏற்றமுற தோற்றமளிக்கும் எழில்மிக்க பிரம்மாண்டமான வண்ணப்பந்தல் ஒன்றை அமைக்கச் செய்திருந்தான் மன்னன். ஆங்காங்கே மாவிலைத் தோரணங்களும் முத்துமணிமாலைகளும் அழகாகக் தொங்கவிடப்பட்டிருந்தன. பந்தலின் முகப்பில் பெரும் வளைவு ஒன்று அமைக்கப் பட்டு வாழை மரங்கள் பல கட்டப்பட்டிருந்தன.விசுவகர்மாவின் கைவண்ணம் பந்தலின் ஒவ்வொரு பகுதியிலும் பாாப்போரைப் பிரமிக்கச் செய்யும
வண்ணம் காட்சி அளித்தன. அரசனும் ராஜகுமாரியும் மற்றுமுள்ளோரும் அவ்விடத்தை வந்தடைந்தனர். ராஜகுமாரி உள்ளே அழைத்துச் செல்லப்பட்டாள். இத்தருணத்தில் தர்மகுப்தன் தனது தாயாருடனும் சகோதரனுடனும் அவ்விடத்தை வந்தடைந்தான். தர்மகுப்தன் தர்ம சங்கடத்துக்குள்ளானான்.

தர்மகுப்தனுக்கு பெரும் குழப்பம் ஏற்பட்டது. நான் வழி தவறிவேறு ஏதாகிலும் இடத்திற்கு வந்துவிட்டேனோ என்று எண்ணித் தவித்தான். சுற்று முற்றும் பார்த்தான். முதல் நாள் தான் சகோதரனுடன் வந்து அமர்ந்திருந்த பாறையையும் மரம் நிறைந்த தாமரைத்தடாகத்தையும் கண்டான். அதே சமயத்தில் பிரம்மாண்டமான எழில்மிகு பந்தலையும் அங்கே மேளவாத்தியங்கள் முழங்குவதையும் கண்டான்.

அன்று கண்ணனுக்கு அவலைக் கொடுத்து விட்டு ஆயர்பாடி திரும்பிய குசேலன் மாளிகையாக மாறிவிட்டதால் மண்குடிசை இல்லாததைக் கண்டு ஒன்றும் புரியாது பிரமித்து நின்றது போல் தர்மகுப்தனும் நெடுநேரம் மனம் பேதலித்துத் தவித்துக்கொண்டிருந்தான். அவனது செயலைக்கண்டு தாய்க்கும் சகோதரனுக்கும் ஒன்றும் புரியவில்லை. இப்படிப்பட்ட இக்கட்டான நிலையில் சர்வேச்சரனை தியானிப்பதைத் தவிர வேறொன்றையும் அறியாத தர்மகுப்தன் கைலாச நாதனை மனதால் தோத்திரம் செய்தான்.
கருணைக்கடலாகவும் அகில லோகத்திற்கு நாயகனாகவும் விளங்கும் பரந்தாமா! நான் வழி தவறி வந்துவிட்டோமோ? அல்லது மதிமயங்கிப் போனேனோ? உண்மையை உணர முடியாமல் போனேனோ? எதனால் அடியேனுக்கு இத்தனை சோதனை! அன்னையையும் சகோரனையும் அழைத்துவந்து ஒரு நல்ல முடிவு காணக்காத்திருந்த நேரத்திலே இப்படியொரு மாயாஜாலம் நடப்பது உனது திருவிளையாடல்தானோ? அடியார்களுக்காக தேவரீர் எத்தனை துன்பங்களைத் தாங்கி உள்ளீர்களே! இந்த பக்தன் பொருட்டும் திருவுள்ளம் கனிந்து உண்மையை உணர்த்தி உள்ளம் தெளிவுபெற உகந்த மார்க்கத்தைக் காண்பித்து அருளல் ஆகாதா? என்றெல்லாம்

பலவாறு பிரார்த்தித்துக் கொண்டே இருந்தான். சிரம் மீது கரம் உயர்த்தி சங்கரனைச் சிந்தையிலே கொண்டு தியானம் செய்யலானான்.
இவ்வாறு கூப்பிய கரத்துடன் நிற்கும் தர்மகுப்தனைக் கண்டுவிட்டாள் அஸ்ருமதி. அவளது ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. தந்தையிடம் தர்மகுப்தனைக் காண்பித்தாள். மேனியெல்லாம் திருவெண்ணீறு. அங்கமெல்லாம் உருத்திராஷ மணிமாலைகள் எண்ணமெல்லாம் சிவமயமென்று சிவப்பழமாக நின்று கொண்டிருந்த இந்த தர்மகுப்பதனைக் கண்டு மனம் பூரித்தான். மன்னன் தன் மகளை அழைத்துக் கொண்டு பூரணகும்ப கலசங்களுடன் மேளதாளம் முழங்க தர்மகுப்தன் இருக்கும் இடத்திற்கு புறப்பட்டான்.

சிவசிந்தையால் நின்றிருந்த தர்மகுப்தன் செவிகளிலும் மேளவாத்தியங்களின் ஓசை கேட்கத்தான் செய்தது. திடுக்கிட்டு நோக்கினான். மன்னவன் மேளவாத்தியங்கள் முழங்க வந்துகொண்டிருந்த அந்தக் காட்சியை தாய்க்கும் சகோதரனுக்கும் காண்பித்தான்.மன்னவன் மகளுடன் இவர்களை நெருங்கினான். கந்தர்வ ராஜகுமாரியைக் கண்டதும் தர்மகுப்தனுக்கு ஏதும் புரியவில்லை. இருவரும் நமஸ்கரித்துக் கொண்டார்கள். தர்மகுப்தா நடந்தவற்றை எனது புத்திரி சொன்னாள். அதற்காகத் தான் இத்தனை ஏற்பாடுகளும். உங்கள் விருப்பம் போலவே பாணிக்கிரஹனம் நடக்கும்.நமக்கெல்லாம் நாதனாக விளங்கும் பரமேஸ்வரன் உன் மீது பூண்டுள்ள அன்பு அளவிடமுடியாதது. உன்னுடைய பூஜைக்கும் பக்திக்கும் கட்டுப்பட்டுத்தான் எம்பெருமான் இத்திருமணம் நடக்க பரிபூரண அருளைத் தந்தார் போலும். அதுமட்டுமல்ல என் ஐயனின் ஆணைப்படி நீ இழந்த உனது நாட்டை மீண்டும் பெற உனக்கு உதவியாக சதுரங்க சேனைகளையும் சீதனமாகத் தருகிறேன். அதனால் நீ என் மகள் அஸ்ருமதியை மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று விண்ணப்பித்தான் வேந்தன். மன்னனின் மொழிகேட்டு தர்மகுப்தனின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. மன்னனை மீண்டும் அன்போடு வணங்கினான். சிரம் மீது கரம உயர்த்தி நம சிவாய மந்திரத்தை விண்ணெட்ட முழங்கினான். அன்று நந்தனுக்காக தில்லைவாழ் அந்தணர் தம் கனவில் எழுந்தருளிய தேவாதிதேவா! என் பொருட்டும் கந்தர்வராஜனுக்கு இப்படியொரு அன்புக்கட்டளை இட்டீர்களா? உன் அன்பு அடியார்களுக்காக நீ எப்படியெல்லாம் அருள்பாலிக்கிறாய்.உருதிராஷ மாலையும் திருவெண்ணீற்றையும் ஐந்தெழுத்து மந்திரத்தையும் நினைப்போர்க்கு சஞ்சலமே கிடையாது என்பதனை உலகிக்கு உணர்த்திவிட்ட ஜோதி சொருபமே!" என்றெல்லாம் பலவாறு மனம் உருகிப்பேசினான். பின்னர் தர்மகுப்தன் மன்னனுக்குத் தனது சகோதரனையும் தாயையும் அறிமுகம் செய்து வைத்தான். "மன்னர் பெருமானே! முற்பிறப்பில் நான் செய்ததவப்பயனால் இவர்கள் என்னை வளர்க்கும் பேறு பெற்றேன். என்னை வளர்க்க அல்லும் பகலும் அரும் பாடுபட்டவர்கள்.எங்களைப் போல சைவமே வடிவமாகத் திகழ்பவர். இரக்கத்தின் மொத்த வடிவம். அன்பின் திருவுருவம்." தர்மகுப்தனின் தாயாரும் சகோதரனும் அரசனை வணங்கினர். தர்மகுப்தன் அவன் செய்து வந்த ப்ரதோஷ விரத மகிமையால்தான் இத்தகைய பாக்கியத்தை பெறுகிறான்.'. அவன் என்னால் வளர்க்கப்பட்டாலும் பிறப்பால் ஷத்திரிய குமாரன் அல்லவா? எம்பெருமான் முன்னின்று இந்தத் திருமணத்தை நடத்துவதைக் கண்டு களிக்க நான் எப்பிறப்பில் எத்தகைய பெரும்பாக்கியம் செய்தேனோ அந்த நாதனே அறியவல்லார்"! என்று கூறினாள்.பின்னர் மன்னன் அவர்களை அழைத்துக்கொண்டு திருமணமண்டபத்திற்கு சென்றார்.

நல்ல சுபமுகூர்த்த வேளையில் திருமண வைபவம் ஆரம்பமானது. தர்மகுப்தனுக்கு அலங்காரம் முடிந்ததும் தர்மகுப்தன் திருவெண்ணீற்றை எடுத்து பஞ்சாஷர மந்திரத்தை ஜபித்து நெற்றியில் பூசிக்கொண்டான். அதன் நடுவே வாசனைத் திரவியத்தையும் அணிந்து கொண்டான். அஸ்ருமதியையும் அலங்காரம் செய்தனர்.பின்னர் மணமகனும் மணமகளும் இன்னிசைக் கோஷம் முழங்க மணமேடைக்கு அழைத்துவரப்பட்டனர். நல்ல சுபயோக சுபமுகூர்த்தத்திலே அஸ்ருமதிக்கும் தர்மகுப்தனுக்கும் திருமண வைபவம் ஈரேழு பதினான்கு உலகங்களும் வியக்கும் வண்ணம் நடந்தேறியது. பரமசிவனும் பார்வதியும் ஆனந்தமாக எழுந்தருளி தமது அன்பு தொண்டனையும் அவனது பத்தினியையும் அனுக்கிரகித்து அந்தத்தியானமாயினர்.விண்ணவர் தண்மலர் சொரிந்தனர். வேதமுனிவர்கள் ஆசி நல்கினர். அதன்பிறகு தர்மகுப்தன் ரத கஜ துரக பதாதிகளுடன் விதர்ப்பதேசத்தின் மீது போர்தொடுத்தான்.சங்கு முழங்கியது. தாய் நாட்டை மீட்க கடும் போர் புரிந்தான்.பகைவர்களை கொன்று குவித்தான்.

வெற்றி!!! வெற்றி!!! வெற்றி!!!
தர்மகுப்தன் வாழ்க!! தர்மகுப்தன் வாழ்க!!

வாழ்த்தொலிகள் திக்கெட்டும் பரவின. விதர்ப்பதேசத்ததில் அதர்மம் தலை சாய்ந்தது. தர்மம் ஓங்கியது.ஆண்டவன் அருளோடு பட்டத்துராணி அஸ்ருமதியுடன் அரியணை அமர்ந்தான். தர்மகுப்தன் தன்னை வளர்த்து ஆளாக்கி விட்ட அன்னைக்கும் அருமைத் சகோதரனுக்கும் அரண்மனை வாழ்வளித்தான்.ப்ரதோஷ வைபவத்தை ஒவ்வொரு சிவாலயங்களிலும் திருவிழா போல் சிறப்புடன் கொண்டாட ஏற்பாடுகளைச் செய்தான். தர்மகுப்தனின் பக்தியும் பண்பும் அன்பும் அவனது கோலை உயர்த்தியது. இவ்வாறு தர்மகுப்தன் அறநெறிநழுவாது அரசோச்சி வரும் நாளில் மாமுனிவர் சாண்டில்யர் தமது சிஷ்யகோடிகளுடன் தர்மகுப்தனை காண்பதற்காக அரண்மணைக்கு வந்துகொண்டிருந்தார்.

மாமுனிவரின் வருகையைப் பார்த்துவிட்ட தர்மகுப்தன் முனிவரை வரவேற்கத்தக்க அத்தனை ஏற்பாடுகளையும் அவசர அவசரமாகச் செய்தான். தர்மகுப்தன் அரண்மனை வாயிலை மிக அற்புதமாக அலங்கரித்து வைத்திருந்தான். அலங்கார வாயிலிற் முன்னே மேள வாத்தியங்கள் முழங்கிய வண்ணமாகவே இருந்தன. தர்மகுப்தனும் ராணியும் தாயும் சகோதரனும் மாமுனிவரை பூரண பொற்கும்ப கலசங்கள் வைத்து உபசரித்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர். தர்மகுப்தனின பட்டத்துராணி அஸ்ருமதி மாமுனிவரின் பாதங்களுக்கு தூய நீர்வார்க்க தர்மகுப்தன் பாதபூஜை புரிந்தான். அர்க்யம் பாத்தியம் ஆசமனீயம் ஆகியவற்றால் அவரை உபசரித்தான். அவன் செய்த உபசாரங்களையும் மரியாமைகளையும் முனிவர் மகிழ்சியுடன் ஏற்றுக்கொண்டார். முனிவர் தர்மகுப்தனையும் அவன் மனைவியையும் சகோதரனையும் தாயையம் அனுக்கிரகித்தார்.மாமுனிவர் தர்மகுப்தனிடம் தர்மகுப்தா! உங்களுக்கு சர்வமங்களமும் உண்டாகட்டும். ப்ரதோஷ விரதத்தை முறையோடு அனுஷ்டித்த உங்களுக்கு சந்திர மௌளசீச்வரர் பரிபூரணமாக திருவருள் புரிந்துள்ளார். நீங்கள் தொடர்ந்து பிரதோஷ விரதத்தை அனுஷ்டித்து சர்வேஸ்வரனுடைய கிருபாகடாச்சத்திற்கு மேலும் பாத்திரமானவர்கள் ஆகுக! இப்பூவுலகில் பல்லாண்டுகாலம் அரசாண்டு பேரின்பவீடு பெறவாயாக! என்று நல்லாசிகள் பல நல்கினார். குருதேவரின் அருளாசியால் அகமும் முகமும் மலர்ந்த தர்மகுப்தனின் உள்ளத்தில் எதனாலோ ஒருவித சஞ்சலம் இருக்கத்தான் செய்தது. அந்த சஞ்சலத்தை தீர்த்துக்கொள்வதற்காக தர்மகுப்தன் முனிவரிடம் சுவாமி! நான் எம்பெருமான் திருவருளால் இத்தனை நற்கீத்தியை இன்று அடைந்த போதிலும் இளமையில் பெற்றோர்களை இழந்து இன்னல்கள் பல அனுபவித்தேன் .அதற்கு காரணம் என்ன? என்று பணிவன்போடு விண்ணப்பித்தான். மாமுனிவர் ஞானத்திருஷ்டியால் உண்மையைக் கண்டறிந்தார். தர்மகுப்தா! முற்பிறப்பில் உனது தந்தையார் செய்த கொடிய பாவம் தான் உன்னை இளமைப்பருவத்தில் துன்புறச்செய்தது. ஒருமுறை உன் தந்தை அனுஷ்டித்து வரும் தருணத்தில் பூஜையை பாதியில் நிறுத்திவிட்டு பகையரசனைக் கொன்று மகிழ்சிகொண்டான். அவ்வாறு ப்ரதோஷ பூஜையை பாதியில் நிறுத்தி சிவநிந்தனை செய்த காரணத்தால் உன் தந்தை செய்த பாவம் உன்னைப்பற்றிக் கொண்டது. ஆனால் நீயோ ப்ரதோஷ பூஜையையும் சிவபூஜையையும் தவறாது அனுஷ்டித்து வந்தாய். அதனால் உனக்கு ஏவப்பட்ட தோஷம் நிவர்த்தியானது. சகல சுபீட்சங்களும் உன்னைத் தானாவே வந்தடைந்தன. ப்ரதோஷப்பூஜையின் மகிமை இதுதான். முனிவர் உரைகேட்டு தர்மகுப்தன் மனச்சுமை நீங்கி மகமகிழ்வு பூண்டான். சாண்டில்ய முனிவர் தர்மகுப்தனை மீண்டும் ஆசீர்வதித்து விடைபெற்றுச் சென்றார். தர்மகுப்தன் பூவுலகில் பலகாலம் வாழ்ந்தான். அறநெறிவழுவாது செங்கோலோச்சினான். அனுதினமும் சிவநாமத்தைச் சிந்தையிலே கொண்டு பக்திமார்க்கத்தில் ஒழுகினான். ப்ரதோஷ விரதத்தை தவறாது அனுஷ்டித்தான்.

சிவபெருமானின் திருவருளால் மூவுலகமும் போற்ற ஆட்சி புரிந்த தர்மகுப்தன் சர்வேச்சரனின் சேவடிக்கமலங்களைப் பற்றி வாழும் பிறவாப்பெருவாழ்வு பெற்றான். தர்மகுப்தனைப் போலவே அவனது மனைவியும் சகோதரனும் தாயும் பிரதோஷ விரதத்தை அனுஷ்டித்த புண்ணியத்தால் எம்பெருமானின் திருவருளை பரிபூரணமாகப் பெற்று பெருவாழ்வு கண்டனர். இக்கலியுகத்தில் நம்மைப்பற்றியும் சகல துன்பங்களும் நம்மைவிட்டகன்று இன்பம் நம்மைவந்து தானே அடைய சகல சௌபாக்கியங்களும் தரும் ப்ரதோஷவிரதத்தை அனுஷ்டிப்போமாக!!!!!!

ஓம் நம சிவாய.

# நமது சிவபெருமானுடைய இயல்பு யாது?

சிவபெருமானே எல்லாமாய் எல்லாவற்றிலுமாய் விளங்குகிறார். அவருக்கு ஈடுஇணை எவருமில்லை.அவரே பரம்பொருள். அவரே பதி. உள்ளும் புறமும் அவரே கடவுள். படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் அவரின் ஐந்து சக்திகள்.ஓம்.

*பாசை*

சிவன் ஒருவரே இருப்பினும் பரப்பிரம்மம் தூய உணர்வு ஆதி ஆன்மா என்ற மூன்று பூரணப்பொருள்களாக அவரை நாம் உணர்கிறோம். பரப்பிரம்மம் என்ற நிலையில் அவர் வெளிப்படாதவர். மறுவற்றவர் எல்லாம் கடந்தவர் தான்கடவுள் காலம் உருவம் இடம் அற்றவர் தூய உணர்நிலையில் அவர் வெளிப்படும் பரம்பொருள் தூய அன்பும் ஒளியுமாய் எல்லா வடிவங்கள் மூலமாகவும் வெளிப்படுகிறார். எல்லா இடங்களிலும் காலங்களிலும் ஒரே நேரத்தில் வியாபித்து எல்லையற்ற ஆற்றலாகவும் சக்தியாகவும் திகழ்கிறார். ஆதி ஆன்மா என்ற நிலையில் அவர் ஐந்து நிலைகளில் வெளிப்படுகிறார். படைப்வராகிய பிரம்மா காப்பவராகிய விஸ்ணு அழிப்பவராகிய உருத்திரன் மறைப்பவராகிய மகேஸ்வரன் அருளுபவராகிய சதாசிவன். அவரே எமது சொந்தக்கடவுள்.எம்மைப் பாதுகாத்துப்பேணி வழிகாட்டி நாம் வளரும்போது உண்மையை மறைத்தும் அவரின் கருணையைப் பெறத்தக்க முதிர்ச்சியை நாம் அடையும் போது உண்மையை வெளிப்படுத்தியும் அவர் அருளுகிறார்.சிவன் எல்லாமாய் எல்லாவற்றினும் எமது எண்ணத்திற்கு அப்பாற் பட்டதாய் நேரடித்தொடர்பு மூலம்அறியக்கூடிய புனித இரகசியமாய் விளங்குகிறார். ஆம் அவரை அறிந்துவிட்டால் எல்லாம் புரிந்துவிடும். அவரே தமோகுணத்தில் உருத்திரன் ராஜோகுணத்தில் பிரம்மா சாத்வகுணத்தில் விஸ்ணு என வேதங்கள் கூறும். ஓம் நமசியவாய.

## சிவபெருமானுடைய வெளிப்படாத உண்மை யாது?

பரமசிவம் சிவனின் வெளிப்படாத உண்மை அல்லது பரம்பொருள் தன்மையாகும். அவரது வெளிப்படும் தன்மை கொண்ட மற்றைய இரு பூரணநிலைகளில் இருந்தும் அது வேறுபட்டுள்ளது. பரமசிவம் எல்லாவற்றிலும் நிறைந்த ஒன்று. அது இல்லாதொன்றில்லை. ஓம்.

*பாசை*

பரமசிவம் தான் கடவுள் உணர்வதால் மட்டுமே பரசிவத்தினை அறிந்து கொள்ள முடியும். அது இல்லை இருப்பினும் இருப்பதாகச் தோன்றுகிறது. யோகிகளும் இருடிகளும் ஞானிகளும் முனிவர்களும் காலம்காலமாக உணர்ந்த பரமரகசியம் அத்தகையது. பரசிவத்தை கண்டறிவதற்கு யோகி தியானத்தில் ஆழ் நிலையில் ஊடுருவிச் செல்கிறார். உலகியல் மனக்கருத்துக்கள் அல்லது கடவுள் பற்றிய அவர் நாடும் எண்ணங்கள் மனதில் எழும்போது நேதி நேதி- இது அல்ல அது அல்ல என அவர் அமைதியாகத் திரும்பத் திரும்பத் கூறுகிறார். அவரது சாந்த உணர்வு சச்சிதானந்தமாக விரிவடைகிறது. அவர் எங்கும் விளங்குகிறார். தனது பேரின்ப நிலையில் எல்லா வடிவங்களிலும் வியாபிக்கிறார். பேரின்பத்துக்கு அப்பால் விளங்கும் தனது இலட்சியத்தை அவர் நினைவில் கொள்கிறார்.நான் நாடுவது இதுவல்ல என்பதை அவர் உறுதியாகப் பற்றியுள்ளார். மந்திர தந்திர பிரணாயாமம் மூலம் அசைக்கமுடியாத மனவுறுதியுடன் உருவம் இடம் காலம் ஆகிய கடைசி சக்திகள் அவரிமிருந்து

தனிவுறவும் யோகி நிர்விகல்ப சமாதியின் ஆழத்தில் பரசிவத்துடன் சங்கமமாகிறார். எல்லாம் கடந்து தோன்றாப் பொருளாய் பிரபஞ்சத்தின் காரணநிலையாய் விளங்கும் அவர் தானாய்ப் பிரகாசித்து உருவமற்று உள்ளும் புறமும் வியாபகமாய் உள்ள பரம்பொருளாய்த் திகழ்கிறார் என வேதங்கள் விளங்குகின்றன.ஓம் நமசிவாய.

*சிவபெருமானுடைய தூய உணர்நிலை யாது?*

எல்லா வடிவங்களூடும் வெளிப்படும் ஆதாரப்பொருள் சிவன் அல்லது மூலவஸ்த்துவான தூய உணர்வே பராசக்தி. இதுவே சிவனின் அறிவுக்கு எட்டாத தோற்றம். முடிவான இடமும் விளங்கும் அனைத்தும் அதுவே. அதுவன்றி எதுவும் நீடிக்க முடியாது.ஓம்.

*பாசை*

பராசக்தி அமைதி அன்பு தோற்றம் சக்தி உணர்வு எனப் பல பெயர்களால் அழைக்கப்படும். இதுவே சச்சிதானந்தம். மாறுபாடற்றதும் அதன் உணர்வுப்பொருள் எதுவுமின்றி முற்றிலும் தன்னனை உணர்ந்ததுமான சக்தியாகும். தெய்வீகஒளி சக்தி அறிதல் என்பவற்றை இது ஒளிபரப்பிக்கொண்டிருக்கிறது. பரசிவத்திலிருந்து வெளிவருவது பராசக்தி. இந்த மனதின் முதல்வெளிப்பாடு உயர் உணர்வு அல்லது வரம்பற்ற அறிதலாகும். சிவபெருமான் தனது வரம்பற்ற எங்கும் நிறைந்த அன்பின் உயர்நிலையின் அறிகிறார். தனது படைப்புகள் அனைத்தின் ஆழத்திலிருந்தும் அவற்றின் விளிம்பு வரையிலும் அவர் அறிகிறார். அவரது பிரசன்னம் ஒவ்வொரு உயிருள்ள உயிரற்ற வடிவிலும் அமைந்துள்ளது. சிவபெருமான் மூலவுலகங்களிலீருந்தோ அல்லது ஏதாவது ஒன்றிலிருந்தோ தனது எங்கும் நிறைந்த பராசக்தியை அகற்றிவிட்டால் அவை உடைந்து சிதைந்து மறைந்துவிடும். சிவனின் சக்தி ஆதாரச்சக்தியாக பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துள்ளது. இந்த எல்லையற்ற சக்திக்கு ஆரம்பமோ முடிவோ இல்லை. உண்மையில் இதுவே சிவபெருமானின் தெய்வீக மனது என்று வேதம் கூறுகிறது. ஆழ்ஆன்மாவாக எல்லாவற்றிலும் மறைந்திருக்கும் அவர் எங்கும் உறைந்து சிருஷ்டிப்பை கவனிக்கிறார். எல்லாவற்றையும் கவனிக்கிறார். முக்கிய குணங்களையும் கடந்து தூய உணர்நிலையும் அவரே.ஓம் நமசிவாய.

ஆதி ஆன்மாவின் இயல்பு யாது?

பரமேஸ்வரன் எவராலும் படைக்கப்படாத எப்போதும் விளங்கும் ஆதி ஆன்மா மகாதேவரையும் மூவுலத்தோரையும் படைத்து ஆட்சிசெய்பவரும் சிவசக்தியும் அவரே.வெளியிலிருந்து அல்லாமல் உள்ளிருந்து ஆட்சி புரியும் சொந்த கடவுள் அவரே. ஓம்.

*பாசை*

எல்லாக் கடவுளராலும் சகல ஜீவராசிகளாலும் வழிபடப்படும் ஆதியந்தமில்லாத மேலான பெருங்கடவுள் பரமேஸ்வரன். இறைவன் பால் அனைவரும் நெருங்கிய உறவு கொள்வதால் அவர் அவ்வளவு நேசிக்கப்படுகிறார்.அவரது அதய்வீக விதியை மீறிச் செயல்படுவதற்கு அனைத்து மாந்தர்களும் அஞ்சுவர். அவர் முதல் ஒலியாக இருப்பதால் ஒவ்வொருவரது உதட்டிலும் அவரது பெயர் தவழுகின்ற நிலையில் அவர் அவ்வளவு

பேசப்படுகிறார். வெளிப்படும் எமது சொந்த கடவுளும் ஆதி ஆன்மாவுமாகிய பரமேஸ்வரன் தன்னைப் போன்ற வடிவமும் தன்மையுள்ள ஆன்மாக்களை சிருஷ்டிக்கிறார்.இறைவன் பால் அன்பு கொள்வது என்பது இறைவனை அறிவது ஆகும். கடவுளை அறிவது என்பது உங்கள் பால் அவரது எல்லையற்ற அன்பை உணர்வதாகும்.அத்தகைய அருளுடைய கடவுள் நம் போன்ற சிற்றுயிர்களை பற்றியும் நம்முடையது போன்ற ஒரு பிரபஞ்சம் குறித்தும் கவலை கொள்கிறார். அவரின் பிரகாசமான தோற்றத்தை ஞானக் காட்சியாகக் காணலாம். செங்சடையும் கருணைபூத்த முகமும் ஒளியுடைய கண்களும் அழகிய கைகளும் கொண்ட பால் வெள்ளை நிறமுடைய சிவபெருமானுடைய தோற்றத்தைப் பல ஞானியர்கள் கண்டுள்ளனர். ஆகமங்கள் மொழிகின்றன. படைத்தலட காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் ஆகிய ஐந்தொழில்களுக்கு காரணகர்த்தா பரமேஸ்வரன். ஓம் நமசிவாய.

சுபம்

**ARUL MIGU THURKADEVI HINDU SOCIETY OF BC**
**STATEMENT OF RECEIPTS AND PAYMENTS**
**FOR THE MONTH OF JUNE 2003**

| | JUNE | YEAR TO DATE |
|---|---|---|
| **RECEIPTS** | | |
| POOJA CONTRIBUTION | $1,268.00 | $14,084.27 |
| ARCHANAI OFFERINGS | $1,372.00 | $9,320.00 |
| MEMBERSHIP CONTRIBUTION | $810.00 | $5,400.00 |
| DONATION GENERAL FUND | $230.00 | $3,285.94 |
| DANCE SCHOOL RENT | $50.00 | $300.00 |
| PROJECT BLOCK DONATION | $551.00 | $1,971.00 |
| WEDDING INCOME | $0.00 | $1,550.00 |
| SAREE SALE | $10.00 | $221.00 |
| UNDIAL COLLECTION | $0.00 | $1,411.91 |
| INTEREST INCOME | $1.26 | $9.06 |
| TOTAL | $4,292.26 | $37,553.18 |
| **PAYMENTS** | | |
| COST OF POOJA | $202.43 | $2,062.78 |
| KITCHEN SUPPLIES,PRASATHAM | $0.00 | $4,085.13 |
| COST OF SERVICE PRIEST | $750.00 | $4,710.00 |
| ANNUAL REPORTING FILING | $0.00 | $25.00 |
| MORTGAGE PAYMENTS -VANCITY | $2,356.00 | $14,136.00 |
| GARBAGE REMOVAL | $83.46 | $500.76 |
| BLOCK DONATION FRAMING | $0.00 | $1,658.53 |
| PEST CONTROL | $0.00 | $180.00 |
| UTILITY | $549.98 | $4,257.66 |
| TELEPHONE | $35.07 | $211.80 |
| CARE CARD TEMPLE PRIEST | $0.00 | $108.00 |
| PRINTING 2003 CALENDAR | $0.00 | $641.20 |
| REPAIRS & MAINTENANCE | $181.90 | $313.83 |
| TOTAL | $4,158.84 | $32,890.69 |
| **EXCESS OF RECEIPTS OVER PAYMENTS** | $133.42 | $4,662.49 |